செய்திக் குறிப்பு

செ.வெ.எண்: 339 நாள்: 15.05.2008

நெடுஞ்சாலைத் துறை

கணினிப் பயிற்சி

உலக வங்கி உதவியுடன் ரூ. 2160 கோடி மதிப்பில் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் (TNRSP) கீழ் நெடுஞ்சாலைத் துறையின் நிர்வாக சீரமைப்பு முக்கிய அங்கமாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி இத்துறையின் பல்வேறு நிலைகளிலுள்ள அலுவலகங்களைக் கணினிமயமாக்கும் பணியும் நடைபெற்று வருகிறது.

2. இத்திட்டத்தின் கீழ் ரூ. 14.77 கோடி மதிப்பில் அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டு தமிழ்நாட்டில் உள்ள 751 நெடுஞ்சாலைத் துறை அலுவலகங்களுக்கு 1779 கணினிகள் வழங்கும் திட்டத்தினை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 15.04.2008 அன்று மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறு துறைமுகங்கள்துறை அமைச்சர், தலைமைச் செயலர், நெடுஞ்சாலைத் துறைச் செயலர், நிதித்துறைச் செயலர், திட்ட இயக்குநர் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்தார்.

3. நெடுஞ்சாலைத் துறையின் 2700 அலுவலர்களுக்கு கணினிப் பயிற்சி அளிப்பது இத்திட்டத்தின் ஓர் அங்கமாகும். இந்தப் பயிற்சியை முதற்கட்டமாக சென்னையில் 15.05.2008 அன்று மாண்புமிகு நெடுஞ்சாலைத் மற்றும் சிறு துறைமுகங்கள்துறை அமைச்சர் திரு. வெள்ளக்கோவில் மு. பெ. சாமிநாதன் அவர்கள், நெடுஞ்சாலைத் துறைச் செயலர், திரு. கே. அலாவுதீன் I.A.S., திட்ட இயக்குநர் திரு. ஆர். தியாகராஜன் I.A.S., அனைத்து நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர்கள் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்தார்.

4. இக்கணினிப் பயிற்சி அனைத்து மாவட்ட அளவிலும் தொடர்ந்து நடைபெறும்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.